**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.J.ராஜேஷ்குமார், எம்.எல்.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

திருவள்ளுவராண்டு, 2054 குரோதி வருடம், புரட்டாசி திங்கள் 15–ம் நாள்
2024–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01–ஆம் நாள் –செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 436/2024**
(TNTS050005292024)

1. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி, கதவு எண்.2–175, இந்திரா காலனியில் குடியிருந்து வரும் லேட்.பிச்சை அவர்களின் குமாரர், வயது சுமார் 55 உடைய மாரியப்பன்.

2. தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், தென்காசி, கதவு எண்.22, களக்கோடி தெருவில் குடியிருந்து வரும் லேட்.பிச்சை அவர்களின் குமாரர், வயது 49 உடைய சங்கர்.

3. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வீரசிகாமணி, கதவு எண்.6/297 மணி நகரில் குடியிருந்து வரும் காளிராஜ் அவர்களின் மனைவி, லேட்.பிச்சை அவர்களின் குமாரத்தி, வயது 44 உடைய செண்டு.

4. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி, கதவு எண்.9/7, சலவையாளர் தெருவில் குடியிருந்து வரும் லேட்.பிச்சை அவர்களின் குமாரர், வயது 36 உடைய மாடசாமி.

5. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி, கதவு எண்.101, இந்திரா காலனி, மெயின்ரோட்டில் குடியிருந்து வரும் லேட்.பிச்சை அவர்களின் குமாரத்தி, வயது 20 உடைய வேலம்மாள்.

6. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி, கதவு எண்.101, இந்திரா காலனி, மெயின்ரோட்டில் குடியிருந்து வரும் லேட்.பிச்சை அவர்களின் மனைவி, வயது 54 உடைய சந்திரா.

..... வாதிகள்

/எதிர்/

1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கடையநல்லூர்.

2. தமிழ்நாடு அரசு, அதன் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி.

..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 07.02.2017 ம் தேதியன்று இறந்துபோன பிச்சையா என்பவருக்கு இந்த வாதிகள் மட்டுமே இந்து வாரிசு உரிமைச் சட்டப்படி வாரிசுகள் என விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், இவ்வழக்கின் செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்களும் வாதிகளுக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 27.08.2024, 30.08.2024 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 30.08.2024 |
| வழக்கு மூலம் | : | 07.02.2017,14.05.2020, 09.08.2021, 07.05.2024 மற்றும் 03.07.2024 ஆகிய தேதிகளில் கடையநல்லூர் தாலுகா, சொக்கம்பட்டி கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| வழக்கின் மதிப்பு | : | அ) பரிகாரத்திற்கு ரூ.5,000/- |
| முத்திரைக்கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டம், பிரிவு அ) பரிகாரத்திற்கு 25(d)-ன் படி ரூ.150/-செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (01.10.2024) விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.R.P.பழனி அவர்கள் முன்னிலையாகியும், படிமெமோ தாக்கல் செய்யாத காரணத்தினாலும், வாதிகளை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதிகளின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்பாணை

1. வாதிகளின் வருகை தவறுகைக்காக தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.
2. செலவு தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

2024–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/–J.ராஜேஷ்குமார்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**